# நம்பிக்கையின் பிரதிபலிப்பு

| | | |
|---|---|---|
| பாடம் 1 | ரிவ்கா | ஏசு நம்மை முழுமையாக புதுப்பிப்பவர் |
| பாடம் 2 | விபச்சாரி | நம்மை மன்னிக்கும் கிருபையுள்ள ஏசு |
| பாடம் 3 | மகதலேனா மரியாள் | ஏசு நம்முடைய வல்லமையுள்ள மீட்பர் |
| பாடம் 4 | விதவை | ஏசு நம்முடைய இரக்கமுள்ள தேவன் |
| பாடம் 5 | பெரும்பாடுள்ள ஸ்திரீ | ஏசு நம்மை முழுமையாக புதுப்பிப்பவர் |
| பாடம் 6 | சமாரிய பெண் | |
| பாடம் 7 | ஏசுவின் தாயாகிய மரியாள் | நாம் ஜீவிக்க வல்லமைத் தரும் இயேசு |

# பாடம் 1 ஏசு நம்மை பின் தொடரும் நேசர்

படத்தில் ரிவ்கா கூறுகிறார்: ‘‘சர்வத்தையும் படைத்த தேவன், என்னை பார்க்கிறார், என்னை அறிந்திருக்கிறார் என்று சந்தேகிக்கிறேன். சர்வ வல்லமையுள்ள தேவன் பரிசுத்த மனிதரைத்தான் நேசிக்கிறார், ஆனால் என்னை நேசிப்பதில்லை.’’

தெரிந்துகொள்

மகதலேனா மரியாளும் படத்தில் வரும் ரிப்காவும் மற்ற பெண்கள் போலவும், எல்லா பெண்களுக்கும் சொல்வதற்கு ஒரு கதை உண்டு. உங்களுக்கும் சொல்வதற்கு ஒரு கதை உண்டு. உங்கள் கதைக்கும் ஒரு துவக்கம், நடு பகுதியும், முடிவும் உண்டு.

- உங்கள் ஆவிக்குரிய பின்னணி என்ன?
- உங்கள் விசுவாச பயணத்தில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? (நீங்கள் ரிவ்கா போல தேவன் உங்களை பார்க்கிறாரா என்று யோசிக்கிறீர்களா? மகதலேனா மரியாள் போல ஏசுவை அறிந்து அவரோடு நடக்கிறீர்களா? அல்லது இவர்களைப் போல் இல்லாமல் நடுவில் இருக்கிறீர்களா?)

உங்கள் விசுவாச பயணத்தில் நீங்கள் எங்கே இருந்தாலும், நீங்கள் தேவனுக்கு விலையேறப்பட்டவர்கள். உங்களை உருவாக்கும் முன்னரே, அவர் உங்களை பார்த்திருக்கிறார் அறிந்தும் இருக்கிறார்.

## தேவன் உங்களை பார்க்கிறார்:

வேதாகமத்தில் சங்கீதம் 139:13-18 சொல்கிறது, ‘‘நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை.

என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது. தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். அவைகளை நான் எண்ணப்போனால், மணலைப்பார்க்கிலும் அதிகமாம்; நான் விழிக்கும்போது இன்னும் உம்மண்டையில் இருக்கிறேன்.’’

- இந்த வார்த்தைகளைக் கேட்கும்போது உங்கள் இருதயத்தை தொடுவது என்ன?
- அவைகளை நம்புவதற்கு கடினமாக இருக்கிறதா? ஏன் அல்லது இல்லை என்றால் ஏன்?

வேதாகமத்தில் கொலோசெயர் 1:15-16 சொல்கிறது ‘‘அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.’’

- குறிப்பாக யார் உங்களை படைத்தது? எந்த நோக்கத்திற்காக?
- இது உங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது?

### தேவன் உங்களை அறிந்திருக்கிறார்: சங்கீதம் 139:1-6

''கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது.''

- இந்த வசனம் தேவனைப் பற்றி உங்களுக்கு என்ன சொல்கிறது?
- தேவனைப் பற்றின உங்கள் எண்ணத்தை இது எப்படி மாற்றுகிறது?
- இந்த வசனங்கள தேவன் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார் என்று உங்களுக்கு சொல்கிறது?
- உங்களுக்கு அது எப்படிபட்ட உணர்வை தருகிறது?

### தேவன் உங்களை நேசிக்கிறார்: ரோமர் 8:39-39

''மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்,

உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.''

### சொல்

சவால்: படத்தின் முடிவில் தேவன் தன்னை நேசிக்கிறார் என்பதை நம்பினாள் ரிவ்கா, அவள் ஏசுவின் மேல் தன் விசுவாசத்தை வைத்தாள். பின்வரும் ஜெபத்தின் மூலமாக, நீங்களும் ஏசு உங்களை படைத்தார், பார்க்கிறார், அறிந்திருக்கிறார், நேசிக்கிறார் என்பதை விசுவாசிக்க தீர்மானிக்கலாம். நீங்கள் அவரை நம்புகிறீர்கள் என்பதை இன்றைக்கு அவரிடம் சொல்லுவீர்களா?

''பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே, நீர் பரிசுத்தமும் நீதியுள்ளவர் நீர் என்னை நேசிப்பதற்காக நன்றி. உமக்கு விரோதமாக பாவம் செய்தேன். வாக்குதத்தம் பண்ணப்பட்ட மேசியாவாகிய ஏசுவை அனுப்பி, சாபத்தையும் குற்றத்தையும் அழித்ததற்காக நன்றி. எனக்கு பதிலாக நீர் மரித்ததற்காக நன்றி. ஜீவிக்கும் இரட்சகரை பின்பற்ற நான் விரும்புகிறேன். என்னை மன்னித்து ஏற்றுக்கொண்டதற்காக நன்றி. ஆமென்.''

ஏசுவைப் பற்றின இந்த சத்தியங்களை விசுவாசிக்க தீர்மானித்துவிட்டீர்களா அல்லது இன்னும் சந்தேகத்துடன் நம்ப போராடுகிறீர்களா. ஒரு வாரம் வரை நேரம் எடுத்துக்கொள்ளுங்கள், உங்கள் சந்தேகங்களைப் பற்றி தேவனிடம் பேசுங்கள். தேவன் எப்படி பதிலளித்தார் என்பதை அடுத்த வாரத்தில் எங்களோடு பகிர்ந்துக் கொள்ளுங்கள்.

# பாடம் 2

# நம்மை மன்னிக்கும் கிருபையுள்ள ஏசு

## தெரிந்துக்கொள்

வேதாகமத்தில் யோவான் 8:1-11 சொல்கிறது:

''இயேசு ஒலிவமலைக்குப் போனார். மறுநாள் காலையிலே அவர் திரும்பித் தேவாலயத்திற்கு வந்தபோது, ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள். அவர் உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசம்பண்ணினார். அப்பொழுது விபசாரத்திலே கண்டு பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவளை நடுவே நிறுத்தி:

போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள்.

இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள்.

அவர்மேல் குற்றஞ்சுமத்துவதற்கான காரணம் உண்டாகும்பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார்.

அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி,

அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார்.

அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள்.

இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத்தவிர வேறொருவரையுங் காணாமல்: ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார்.

அதற்கு அவள்: இல்லை, ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.''

- இந்த பெண்ணின் சூழ்நிலை என்ன?
- அவளை குற்றஞ்சாட்டினவர்களைப் பற்றி வசனங்கள் என்ன சொல்கிறது?
- கையும் களவுமாய் பிடித்து ஜனங்களால் பொது இடத்தில் கீழே தள்ளப்பட்ட அவளுக்கு எப்படி இருந்திருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

இதேப்போல நாமும் சட்டத்திற்கு விரோதமாகவும், மற்றவர்களை காயப்படுத்தும்போதும் அல்லது தேவனை காயப்படுத்தும் போதும், தேவன் அவைகளை பாவம் என்று அழைக்கிறார். பாவம் என்பது நாம் தேவனுடைய சித்தத்தின்படி செய்யாமல் நம்முடைய சொந்த வழியில் சென்று நமக்கு பிடித்ததை செய்வது ஆகும்.

- இயேசுவின் உதவி அந்த பெண்ணிற்கு எவ்வளவு முக்கியமாய் இருந்தது?
- மன்னிப்பைப் பெற அந்த பெண் என்ன செய்தாள்?

கீழுள்ள வசனங்கள் ஆவிக்குரிய மரணத்தை பற்றி சொல்கிறது.

கொலோசெயர் 2:13-14 சொல்கிறது: ‘‘உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து; நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து’’

- இந்த வசனத்தின்படி நமக்கு எதிரான குற்றங்களுக்கு என்ன நேர்ந்தது?

மேலுள்ள வசனங்கள் கூறும் மோசேயின் பிரமாணங்களின்படி நாம் வாழவில்லை, ஆனால் சில ஒழுக்க, நீதி நெறி, கலாச்சார நியதிகளை பின் பற்றி வாழ்கிறோம்.

தேவன் ரோமர் 8:1ஆம் வசனத்தில் நமக்கு சொல்கிறார், ‘‘ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.’’

- இந்த வசனத்தின்படி கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களுக்கு என்ன நடக்கும்?
- நம்மை நாம் பார்க்கும் விதத்தை அது எப்படி மாற்றும்?
- இதை நாம் வேதத்தில் இருந்து அறிந்திருக்கிறபடியால், நாம் எப்படி தேவனிடமும் மற்றவர்களிடமும் நடந்துக்கொள்ள வேண்டும்?

இயேசு அந்த விபாச்சார பெண்ணிடம் பேசிய போது, அவர் அவளை மன்னித்து, ‘‘நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே’’ என்று அவளிடம் கூறினார்.

1யோவான் 1:9-10 சொல்கிறது: ‘‘நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது.’’

- தேவனுடைய மன்னிப்பைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும்? எத்தனை முறை?

## சொல்

சவால்: நம்முடைய தவறான நினைவுகள், எண்ணங்கள், செயல்களை தேவனிடம் ஒத்துக்கொள்வதுத்தான் பாவ அறிக்கை ஆகும். நாம் தவறு செய்தோம் என்று அவரிடம் ஒத்துக்கொள்ளும்போது தேவன் நம்மை மன்னிக்கிறார்.

நாம் பாவ அறிக்கையை செயல்முறைப்படுத்துவோம்:

1. உங்கள் பாவத்தைப் பட்டியலிடுங்கள்.
   உங்கள் வாழ்க்கையில் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை நீங்கள் பார்க்கும்படி அமைதலாக தேவனிடம் கேளுங்கள். உங்கள் மனதிற்கு தேவன் கொண்டுவரும் காரியங்களை ஒரு தாளில் பட்டியலிடுங்கள். ஒவ்வொன்றையும் நீங்கள் எழுதும்போதும் தேவனிடம் அறிக்கையிடுங்கள்.

2. தேவனுடைய வாக்குத்தத்தங்களை உங்கள் பட்டியலின் பக்கத்தில் எழுதுங்கள்.

உங்கள் பட்டியலை எழுதிய பின்னர் தேவனுடைய மன்னிப்பின் வாக்குத்தத்தமான 1யோவான் 1:9 பட்டியல் அருகில் எழுதுங்கள். வேத வசனம் சொல்கிறது, ‘‘நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.’’

3. பட்டியலை அழித்துவிடுங்கள்.

ஜெபமும் பாவ அறிக்கைக்கும் பின்னர் விசுவாசத்தின் மூலமாக தேவனின் மன்னிப்பை பெறுங்கள். தேவன் உங்களை மன்னித்துவிட்டார் என்பதற்கு அடையாளமாக உங்கள் பாவ பட்டியலை அழித்துவிடுங்கள். தேவன் உங்களை முழுமையாக மன்னித்துவிட்டார் என்று காட்டும் வண்ணமாக உங்கள் பட்டியலை துண்டுகளாக கிழிக்கவோ அல்லது எரித்துவிடவோ விரும்புவீர்கள்.

மன்னிக்கப்படுவது குற்றத்திலிருந்து விடுதலை தருகிறது!

இந்த வாரத்தில், நீங்கள் பாவம் செய்யும்போதே அதை உங்களுக்கு வெளிப்படுத்த தேவனிடம் கேளுங்கள். தேவனிடம் அறிக்கையிட்டு, உங்களை மன்னித்தத்தற்காக அவருக்கு நன்றி சொல்லுங்கள்.

# பாடம் 3

## ஏசு நம்முடைய வல்லமையுள்ள மீட்பர்

தெரிந்துக்கொள்

லூக்கா 8:1-3 சொல்கிறது: "பின்பு, அவர் பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் பிரயாணம்பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்துவந்தார். பன்னிருவரும் அவருடனேகூட இருந்தார்கள். அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்."

- ஏசுவை சந்திப்பதற்கு முன்பாக மேரி மகதலேனாளுடைய வாழ்க்கை எப்படி இருந்தது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
- ஏசு கட்டளையிட்ட பின்னர் அசுத்த ஆவிகள் அவளை விட்டு சென்றது என்று ஏன் நீங்கள் நினைக்கிறீர்கள்?
- இது எப்படி மகதலேனாள் மரியாள் வாழ்க்கையை மாற்றியது?

ஏசுவின் ஊழியத்தின் ஆரம்பக் காலத்தில், அவரது சொந்த ஊரிலுள்ள ஜெப ஆலயத்தில் ஏசு வேதத்தில் இருந்து ஒரு பகுதியை வாசித்தார், "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" (ஏசாயா 61:1-2; லூக்கா 4:18-19)

- ஏசு இந்த உலகத்திற்கு வந்தபோது அவரது நோக்கம் என்ன என்பதை இந்த வசனங்கள் நமக்கு கூறுகிறது?
- உங்கள் வாழ்க்கையில் எதிலிருந்து விடுதலைப் பெற விரும்புகிறீர்கள்?

தேவனோடு நாம் உறவு வைப்பதன் மூலம், இயேசு நம்முடைய போராட்டங்கள் மற்றும் அடிமைத்தனத்தினின்று நம்மை விடுவிக்க முடியும். இன்றைய உலகத்தில் பல்வேறு காரியங்களுக்கு அடிமையாவதைப் பார்க்கிறோம், அவை உணவு, பணம், சூதாட்டம், மது, போதை மருந்து, தொலைக்காட்சி அல்லது ஊடகம். நாம் அடிமைத்தனத்தில் வெவ்வேறு நிலையில் இருந்தாலும், நம்மெல்லாருக்கும் உள்ள ஒற்றுமை என்னவென்றால் நாம் நமக்குள் இருக்கும் வேதனையை ஆற்ற வெளியே இருந்து ஏதாவது ஒன்றைத் தேடுகிறோம். இதுத்தான் அடிமைத்தனத்தை கவர்ச்சிக்ககரமாய் ஆக்குகிறது – அவை தற்காலிகமான ஆறுதலை மட்டுமே தருகிறது.

ஏசு நம்முடைய வல்லமையுள்ள மீட்பர். கொலேசெயர் 1:13.14 அவரைப் பற்றி சொல்கிறது, "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.

(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.''

- இந்த வசனங்கள் நமக்கு என்ன விளக்குகிறது/சொல்லுகிறது?

மகதலேனாள் மரியாள் போல நாமும் அடிமைத்தனத்தின் வல்லமையில் இருந்தும் பாவத்தில் இருந்தும் விடுதலை ஆக்கப்பட்டு தேவனுடைய விடுதலையையும் நோக்கத்தையும் அனுபவிக்கிற வாழ்க்கை பெறலாம். நாம் புதிய ராஜ்யத்திற்குள் நுழைந்து அங்கே நாம் தேவனின் அன்பு, மன்னிப்பு, நித்திய வாழ்வை பெறுகிறோம். கிறிஸ்துவின் வல்லமை மூலம், நாம் வீடுதலை என்ன என்பதை அறிந்து பகை, பயம் மற்றும் அடிமைத்தனத்தை மேற்கொண்டு வாழ ஆரம்பிக்கிறோம்.

கிறிஸ்துவை பின் தொடரும் போது போராட்டங்கள் முடிவுக்கு வராது என்பதை நினைவு கூறுங்கள். வேதாகமத்தில் அதிகமான பகுதியை எழுதி இருக்கிற அப்போஸ்தலனாகிய பவுலுக்கும் பல கஷ்டங்கள் இருந்தது.

2கொரிந்தியர் 1:8-11 பாருங்கள்:

''ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம். அநேகர்மூலமாய் எங்களுக்கு உண்டான தயவுக்காக அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும்பொருட்டு, நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவிசெய்யுங்கள்.''

- இந்த வசனங்களில் பவுல் எவ்வாறு போராட்டங்கள் வழியாக சென்றார்?
- உங்களுக்கு போராட்டங்கள் இருக்கும்போது நீங்கள் தேவனைச் சார்ந்திருந்தால் எது உங்கள் வாழ்க்கையில் வித்யாசமாக இருந்திருக்கும்?

## சொல்

மகதலேனாள் மரியாளின் பிரச்சனை அசுத்த ஆவியாகும். இன்றைக்கு நம்முடைய வாழ்வின் போராட்டத்திற்கு அது காரணமாய் இருக்காது. அவளுக்கு இயேசு வல்லமையுள்ள மீட்பராய் இருந்ததுப்போல உங்களுக்கும் வல்லமையுள்ள மீட்பராக இருக்க அவர் விரும்புகிறார். நம்முடைய விசுவாச பயணத்தில் நாம் எங்கே இருந்தாலும், நம் எல்லாருக்கும் போராட்டங்கள் உண்டு.

## சவால்:

இந்த வாரம் உங்கள் போராட்டத்தின் ஒரு பகுதியை தேவனிடம் சொல்லுங்கள். நீங்கள் கற்றுக்கொண்டதை மற்றவர்களிடம் பகிர்ந்துக்கொள்ளுங்கள்.

கொலேசெயர் 1:13,14யை மனப்பாடம் செய்து, இந்த வசனங்களை புரிந்துக்கொள்ளவும், இந்த சத்தியத்தின்படி வாழவும் தேவனிடம் உதவி கேளுங்கள்.

# பாடம் 4

# ஏசு நம்முடைய இரக்கமுள்ள தேவன்

## தெரிந்துக்கொள்

லூக்கா 7:11-17 சொல்கிறது: ‘‘மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போனார்; அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனேகூடப் போனார்கள். அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி கொண்டுவந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்; ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனேகூட வந்தார்கள். கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி, கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார். எல்லாரும் பயமடைந்து: மகாதீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்தச் செய்தி யூதேயா தேசமுழுவதிலும் சுற்றியிருக்கிற திசைகள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று.’’

- அந்த பெண்ணின் சூழ்நிலை என்ன?
- இந்த சூழ்நிலையில் இயேசு அவளுக்கு எப்படி உதவி செய்தார்?
- மரித்த அவளது மகனை இயேசு உயிரோடு எழுப்பினது அவளுக்கு எவ்வளவு முக்கியமாக இருந்தது?

சங்கீதம் 68:5 சொல்கிறது, ‘‘தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார்.’’

- தேவனின் குணத்தைப் பற்றி இந்த வசனம் என்ன கூறுகிறது?

இந்த விதவைப்போல நமக்கும் மகிழ்ச்சியான சூழ்நிலைகள் உள்ளன.

- இப்பொழுது நீங்கள் எந்த காரியத்தைக் குறித்து ஆவலாய் இருக்கிறீர்கள்?

பிலிப்பியர் 4:6-7, 19 சொல்கிறது: ‘‘நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.’’

- ‘‘எல்லாம்’’ என்ற வார்த்தையில் என்னென்ன தேவைகள் அடங்கியுள்ளது?
- இது தேவனுடைய வாக்குத்தத்தம் என்றால் நம்முடைய பதில் என்ன?
- தேவன் நம்முடைய தேவைகளை உடனடியாக சந்திப்பதில்லை என்று நமக்கு தோன்றினால், நாம் இன்னும் அவர் மேல் நம்பிக்கை வைக்கலாமா?

மத்தேயு 6:31-34 சொல்கிறது: ‘‘ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று

உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்.''

- நாம் என்ன செய்யவேண்டும் என்று தேவன் இந்த வசனத்தில் கூறுகிறார்?
- ''முதலாவதாக தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்,'' என்பது எதைக் குறிக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
- இந்த சத்தியத்தை உங்கள் வாழ்க்கையில் அப்பியாசிக்க சில செயல்முறை வழிகள் என்ன?

## சொல்

1பேதரு 5:7 சொல்கிறது, ''அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.''

மத்தேயு 11:28 சொல்கிறது, ''வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.''

சவால்: தேவன் மேல் வைக்க பாரங்கள் எதுவாயினும் உங்களிடம் உள்ளதா?

இரண்டு பேராக சேர்ந்து ஓவ்வொருவருக்காய் ஜெபியுங்கள்.

உங்கள் வாழ்க்கையின் ஆபத்தான நேரத்தில் தேவன் உங்களுக்கு உதவி செய்ய அவரிடம் கேட்பேன் என்று வாக்களியுங்கள். உங்கள் ஜெபத்தினால் உங்களுக்கு நடந்தவற்றை அடுத்த வாரத்தில் எங்களிடம் பகிர்ந்துக்கொள்ளுங்கள்.

# பாடம் 5

# ஏசு நம்மை முழுமையாக புதுப்பிப்பவர்

## தெரிந்துக்கொள்

மாற்கு 5:25-34 சொல்கிறது: ''அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ, அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிறபொழுது,

இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டு: நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி; ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று; அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள்.

உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து, ஜனக்கூட்டத்துக்குள்ளே திரும்பி: என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று கேட்டார்.

அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக்கொண்டிருக்கிறதை நீர் கண்டும், என்னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே என்றார்கள்.

இதைச் செய்தவளைக் காணும்படிக்கு அவர் சுற்றிலும் பார்த்தார்.

தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த அந்த ஸ்திரீயானவள் பயந்து, நடுங்கி, அவர் முன்பாக வந்து விழுந்து, உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னாள்.

அவர் அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடேபோய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்.''

## தெரியுமா?

வேதாகமத்தில், லேவியராகமம் 15:19-23, 25, 28 வசனங்களில் பெண்கள் பின்பற்ற வேண்டிய நியமங்கள் இருந்தன. இந்த வசனங்களை வாசிக்கும் போது, பன்னிரண்டு வருடங்களாக அந்த பெண் அசுத்தமாக இருந்ததால் சந்தித்த தனிமை மற்றும் நம்பிக்கையற்ற நிலையை கற்பனை செய்து பாருங்கள்.

''சூதகஸ்திரீ தன் சரீரத்திலுள்ள உதிர ஊறலினிமித்தம் ஏழுநாள் தன் விலக்கத்தில் இருக்கக்கடவள்; அவளைத் தொடுகிற எனும் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

அவள் விலக்கலாயிருக்கையில், எதின்மேல் படுத்துக்கொள்ளுகிறாளோ எதின்மேல் உட்காருகிறாளோ அதெல்லாம் தீட்டாயிருக்கும்.

அவள் படுக்கையைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

அவள் உட்கார்ந்த மணையைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

அவள் படுக்கையின்மேலாகிலும், அவள் உட்கார்ந்த மணையின்மேலாகிலும் இருந்த எதையாகிலும் தொட்டவன், சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

ஒரு ஸ்திரீ விலகியிருக்கவேண்டிய காலம் அல்லாமல் அவளுடைய உதிரம் அநேகநாள் ஊறிக்கொண்டிருந்தால், அல்லது அந்தக் காலத்துக்கு மிஞ்சி அது கண்டிருக்கும்

நாளெல்லாம் ஊறிக்கொண்டிருந்தால், தன் விலக்கத்தின் நாட்களிலிருந்ததுபோல அவள் தீட்டாயிருப்பாளாக.

அவள் தன் உதிர ஊறல் நின்று சுத்தமானபோது, அவள் ஏழுநாள் எண்ணிக்கொள்வாளாக; அதின்பின்பு சுத்தமாயிருப்பாள்.''

- இந்த பெண்ணின் சூழ்நிலை என்ன? எவ்வளவு நாள் கஷ்டப்பட்டிருப்பாள்? அவளுக்கு எவ்வளவு செலவு ஆகி இருக்கும்?
- அவள் இயேசுவைப் பற்றி கேள்விப்பட்ட பிறகு என்ன செய்தாள்?

உங்கள் வாழ்க்கையில் வெவ்வேறு பகுதிகளை புதுப்பிக்க தேவன் விரும்புகிறார். அவர் உங்களை மிகவும் நேசிப்பதால் அவர் அதை முழுமையாக செய்கிறார்.

புதுப்பித்தல் என்பது ஒரு செய்கையின் ஒழுங்கு ஆகும். இந்த பெண் 12 ஆண்டுகள் காத்திருந்து, தன்னுடைய எல்லா பணத்தையும் செலவழித்து, ஏற்ற நாள் வந்தபோது அவள் இயேசுவை சந்திக்கவும் தன்னுடைய விசுவாசத்தின் பலனாக தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாகவும் அவரால் குணமாக்கப்பட்டாள். தேவன் எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார், நம்மெல்லாருக்கும் அவர் ஒரு கால அட்டவனை வைத்தும் இருக்கிறார். இந்த பெண்ணைப்போல நாம் விசுவாசித்தாலும், அவர் நாம் எதிர்பாராத வழியிலும் அல்லது நேரத்திலும் நம்மை குணமாக்குவார்.

எபிரெயர் 4:15-16 சொல்கிறது: ''நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.''

- நீங்கள் நம்பிக்கையோடு தேவன் அருகில் வருவதற்கு தடையாக எந்த காரியங்கள் இருக்கிறது?
- இந்த பெண் தான் விரும்பியதை இயேசுவிடம் பெற்றுக்கொண்டாள் - அவளது சரீர சுகம். நாம் நம்பும் விதமாக தேவன் நமக்கு பதிலளிக்கவில்லை என்றால் அதற்கு என்ன அர்த்தம்?

கடைசிக் கேள்விக்கு பதிலை பவுல் 2கொரிந்தியர் 12:7-10லுள்ள தனது சொந்த அனுபவத்திலிருந்து தருகிறார், வசனம் சொல்கிறது: ''அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது.

அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன்.

அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.

அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்.''

பவுல் கேட்டவுடனே தேவன் அவரை குணமாக்கவில்லை, அதனால் அவர் தன் பெலவீனத்திலும் தேவனுடைய பெலத்தை சார்ந்திருக்க வேண்டியதாய் இருந்தது.

யாக்கோபு 1:2-4 சொல்கிறது: ‘‘என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.’’

- இந்த வசனங்கள்படி, தேவன் நம்மை புதுப்பிக்காமல் அல்லது நம்முடைய ஜெபங்களை கேட்கப்படாமல் இருக்குபதற்கு சில காரணங்கள் என்ன?

சொல்

சங்கீதம் 147:3 சொல்கிறது, ‘‘இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்.’’

சங்கீதம் 23:1-3 சொல்கிறது: ‘‘கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.

அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.

அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.’’

சவால்: உங்கள் வாழ்க்கையில் புதுப்பிக்க வேண்டிய முக்கியமான காரியங்கள் என்ன? இந்த சூழ்நிலையில் புதுப்பித்தல் எப்படி இருக்கவேண்டும்?

உங்கள் வாழ்க்கையில் புதுப்பிக்க வேண்டிய சில காரியங்களை எழுதுங்கள். அவைகள் சரீரம், உறவு, ஆவிக்குரிய அல்லது மற்றவைகளாக இருக்கலாம். கர்த்தருக்கு தெரியப்படுத்தி, அவர் அவைகளை முழுமையாக புதுப்பிப்பார் என்று விசுவாசத்தோடு நம்புங்கள்.

புதுப்பிக்கப்பட காரியம் ஏதும் உங்களுக்கு இருந்தால் அதை தேவனிடம் ஒப்படையுங்கள். அவருடைய பதில் எதுவாக இருந்தாலும் அதற்காக விசுவாசத்தோடு நன்றி சொல்லுங்கள். தேவனுக்கு நன்றி சொல்வது விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது. நம்பிக்கையை இழந்துவிடாதீர்கள். அவர் நல்லவர், அவர் உங்களை நேசிக்கிறார்!

# பாடம் 6

தெரிந்துக்கொள்

யோவான் 4:7-26, 28-30, 39-42

இயேசு தன் சீஷர்களுடன் யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு செல்லும்போது அவர்கள் சமாரியா வழியாக சென்றார்கள், மதியான வேளையில் யாக்கோபு கட்டின கிணற்றின் அருகில் அவர்கள் நின்று இளைப்பாறினார்கள்.

"அவருடைய சீஷர்கள் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருந்தார்கள்."

அப்பொழுது சமாரிய நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ளவந்தாள், இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத்தா என்றார்.

யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்.

இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்.

அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்.

இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்.

இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்.

நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக்கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்.

அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்.

இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார்.

அதற்கு அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான்.

எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார்.

அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்.

எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே என்றாள்.

அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும்மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது.

நீங்கள் அறியாததைக் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது.

உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.

தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.

அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்.

அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்.

அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி: நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள்.

அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்.

நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

சமாரியர் அவரிடத்தில் வந்து, தங்களிடத்தில் தங்கவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; அவர் இரண்டு நாள் அங்கே தங்கினார்.

அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்து,

அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே, கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

- இந்த பெண்ணின் நிலை என்ன?
- இயேசு இந்த பெண்ணிடம் பேச விரும்பினார். இது அவரது குணத்தைப்பற்றி நமக்கு என்ன தெரிவிக்கிறது?

யோவான் 4:16-18 சொல்கிறது:

"இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார்.

அதற்கு அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான்.

எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார்."

- இயேசு அந்த சமாரியா பெண்ணிடம் அவளது கணவர் பற்றி ஏன் கேட்டார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
- இதுப்போல் இயேசுவிடம் பேச உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தால், அவர் உங்களிடம் என்ன பேசி இருப்பார் என்று நினைக்கிறீர்கள்?

யோவான் 4:28-30, 39-42 சொல்கிறது:

அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி: நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள்.

அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்.

நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

சமாரியர் அவரிடத்தில் வந்து, தங்களிடத்தில் தங்கவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; அவர் இரண்டு நாள் அங்கே தங்கினார்.

அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்து,

அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே, கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

வேதாகமத்தில் 2கொரிந்தியர் 5:17-21 சொல்கிறது:

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.

அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.

ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்."

வேதாகமத்தில் ரோமர் 5:8-10 சொல்கிறது:

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.

இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.

நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே."

## சொல்

சமாரியா பெண் இயேசுவிடம் செய்த உரையாடலின் விளைவாக இரண்டு காரியங்கள் நடந்தது.

- அவளுடைய கடந்த வாழ்க்கை அவளை தேவனிடமிருந்து பிரிக்க முடியவில்லை.
- அந்த நகரத்திலுள்ள ஜனங்கள் அவளோடு சேர்ந்து விசுவாசிகள் ஆனார்கள்.

கலாத்தியர் 3:28 சொல்கிறது: ‘‘யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.’’

- பெண்களாக நாம் இன்றைய உலகத்தில் சந்திக்கும் தடைக்கற்கள் என்ன?
- உங்கள் வாழ்க்கையில் எந்த தடைக்கற்களில் இருந்து நீங்கள் விடுதலைப் பெற விரும்புகிறீர்கள்?

இந்த தடைக்கற்களுக்காக இப்பொழுதே ஜெபியுங்கள்.

யோவான் 4:39 சொல்கிறது, ‘‘நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்.’’

ஒரு புறஜாதி பெண் அந்த ஊரின் கதாநாயகி ஆனாள்.

# பாடம் 7

# நாம் ஜீவிக்க வல்லமைத் தரும் இயேசு

## தெரிந்துக்கொள்

லூக்கா 1:26-38:

‘‘ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில்,

தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான்; அந்தக் கன்னிகையின் பேர் மரியாள்.

அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்.

அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய்.

இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.

அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.

அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.

அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்.

தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.

இதோ, உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள்; மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம்.

தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான்.

அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்.’’

மரியாள் தன்னுடைய சொந்த வேலையை பார்த்துக்கொண்டிருக்கும் போது காபிரியேல் என்னும் தூதன் அவளை சந்தித்து, அவள் ஒரு குமாரனை பெறுவாள் என்று சொன்னார். ஒரு ஆண்ணை அறியாமல் குழந்தை பெறமுடியாது என்று நம் எல்லோரும் அறிவோம். இந்த கேள்வியை மரியாள் தூதனிடம் கேட்டபோது, ‘‘தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை,’’ என்று மரியாளுக்கு காபிரியேல் பதிலளித்தார். இந்த காரியம் நடப்பதற்கு, ‘‘பரிசுத்த ஆவி உன் மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும்,’’ என்று தூதன் மரியாளுக்கு விளக்கினார்.

- காபிரியேலின் தூதைக் கேட்ட பின்னர் மரியாள் என்ன காரியங்களை நினைத்தும் உணர்ந்தும் இருப்பாள்?

- மரியாள் பல காரியங்களை குறித்து நினைத்தும் உணர்ந்தும் இருந்தாலும், அவளது உண்மையான பதில் என்ன?
- நீங்கள் எப்படி நடந்திருப்பீர்கள் என்று நினைக்கிறீர்கள்?

மனிதனால் செய்ய முடியாத காரியத்தை தேவன் மரியாள் செய்யும்படி தேர்ந்தெடுத்ததன் மூலம் அவளுடைய வாழ்க்கை ஒரு நொடி பொழுதில் மாறியது. மரியாளைப் போல நம்மில் யாரும் தேவ குமாரனைச் சுமக்க போவதில்லை. விசுவாசத்தோடு இயேசுவை ஒவ்வொரு நாளும் பின்பற்றவேண்டும், மனுஷிகத்தில் இது கூடாத காரியமான இதைச் செய்யுமாறு தேவன் நம்மைக் கேட்கிறார்.

யாரோ ஒருவர் சொல்லி இருக்கிறார், கிறிஸ்துவ வாழ்க்கை வாழ்வது கடினமல்ல, அது கூடாத காரியம். கிறிஸ்தவனாக வாழ்வதற்கான வழிமுறைகளை பின்வரும் வசனங்கள் விளக்குகின்றது.

மத்தேயு 16:24 சொல்கிறது: ''அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.''

யாக்கோபு 1:26 சொல்கிறது: ''உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்.''

மத்தேயு 5:48 சொல்கிறது: ''ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.''

- மேலுள்ள வசனங்களில் தேவன் நம்மை என்ன செய்யவேண்டும் என்கிறார்?

நம்முடைய சொந்த வல்லமையால் இந்த கட்டளைகளை செய்வது கூடாத காரியம், ஆனால் தேவன் நாம் நம் சொந்த பெலத்தால் இயேசுவைப் பின்பற்ற எதிர்பார்க்கவில்லை. கிறிஸ்துவ வாழ்க்கை என்பது இயற்கைக்கு அப்பாற்பட்டது, கிறிஸ்து மாத்திரமும் பரிசுத்த ஆவியின் வல்லமையோடும் உங்களை வாழ வைக்க முடியும்.

மூன்று வகையான மனிதர்கள் இருக்கிறார்கள் என்று வேதம் கூறுகிறது.

1. சுபாவ மனுஷன் என்பவன் இயேசுவை தன்னுடைய வாழ்க்கையில் அழைக்காதவன். 1கொரிந்தியர் 2:14 சொல்கிறது, ''ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்.'' சுபாவ மனிதனின் குண நலன்கள் பயம், குற்றம், கவலை, கீழ்ப்படியாமை ஆகும்.

2. ஆவிக்குரிய மனிதன் பரிசுத்த ஆவியால் அதிகாரமாய் நடத்தப்படுகிறான். 1கொரிந்தியர் 2:15 சொல்கிறது, ''ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.'' ஆவிக்குரிய மனிதனின் சில குணநலன்கள் நம்பிக்கை, கீழ்ப்படிதல், சமாதானம், மன்னிப்பு, அன்பு.

3. மாம்சத்துக்குரிய மனுஷன் இயேசுவை தன் வாழ்க்கையில் அழைத்தும், அவன் சொந்த பெலத்தால் இயேசுவை பின்பற்ற நினைத்து தோல்வியில் வாழ்கிறான்.

1கொரிந்தியர் 3:1 சொல்கிறது, "மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று." மாம்சத்துக்குரிய மனிதனின் குணங்கள் தோல்வி, சுயநீதி, ஆவிக்குரிய வாழ்க்கையில் தடுமாற்றம்.

- எந்த மனிதனாக நீங்கள் இருக்க விரும்புகிறீர்கள்?

பலர் பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட விரும்புகின்றனர். பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட ஒரு வாழ்க்கையை எப்படி வாழ்வது என்று பார்ப்போம்.

வேதாகமத்தில் தேவன் மூன்று வித்யாசமான நபர்களாக தோன்றுகிறார்: பிதா, குமாரன், பரிசுத்த ஆவி. கிறிஸ்துவின் சீஷர்களாக நாம் வாழ்வதற்கு நமக்கு வல்லமை தருவதற்காக தேவன் பரிசுத்த ஆவியை நமக்கு தந்திருக்கிறார்.

நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவேண்டும் என்று வேதம் கட்டளையிடுகிறது.

எபேசியர் 5:18 சொல்கிறது: "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து."

தேவன் இதை கட்டளையிட்டு இருக்கிறபடியால் இது தேவனுடைய சித்தம் என்றும் நாம் அறிவோம். கீழுள்ள வசனம் 1யோவான் 5:14-15 சொல்கிறது:

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.

நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்."

மரியாள் தன்னுடைய சூழ்நிலையிலும் தேவனை நம்பி விசுவாசித்ததுப் போல, நாமும் தேவன் நமக்கு சொல்லும் காரியங்களைச் செய்ய தேவனை நம்பி விசுவாசத்தோடு பதிலளிப்போம்.

- ஆதலால், நாம் எப்படி பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட முடியும்?

## சொல்:

சவால்: இந்த வாரத்தில் ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியானவர் உங்களை வழிநடத்துமாறு தேவனிடம் கேளுங்கள்.

இந்த வாரம் நீங்கள் பரிசுத்த ஆவியானவர் பற்றி கற்றுக்கொண்டதை ஒரு நபரிடமாவது சொல்லுங்கள்.

பரிசுத்த ஆவியானவர் பற்றி இன்னும் அதிகமாய் அறிந்துக்கொள்ள கலாத்தியர் 5:16-26, ரோமர் 5:1, 8:1, எபேசியர் 5:18 வாசியுங்கள்.